**Headlines:** Vignesh's Race Car Is Asia's Best
**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 04 June 2009

# ஆசியாவில் சிறந்த விக்னேஷ்வரனின் விரைவுக் கார்

தமிழவேல்

ஃபார்முலா விரைவு கார் உருவாக்கும் தேசிய பல்கலைக் கழகக் குழுவில் இடம்பெறும் முதல் இந்தியர் எனும் பெருமையைப் பெற்றிருக்கிறார் விக்னேஷ்வரன் சண்முகம்.

அமெரிக்காவின் மோட்டார் கார் பொறியியலுக்கான அனைத்துலக பல்கலைகழகங்களுக்கான விரைவுக் கார் போட்டியில் கடந்த எட்டு ஆண்டுகளாகப் பங்கெடுத்து வருகிறது தேசியப் பல்கலைக் கழகத்தின் விரைவு கார் தயாரிக்கும் குழு. இதுவரை இல்லாத சாதனையாக 19வது இடத்தில் அக்குழு தேர்வு பெற்றது.

பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்த 100க்கும் மேற்பட்ட குழுக்களில் முதல் 20 நிலையில் வந்த ஒரே ஆசிய குழு இது.

கடந்த 9 மாதங்களாக இந்த விரைவு கார் தயாரிப்பதில் ஈடுபட்டு வந்த 16 மாணவர்களில் விக்னேஷ்வரனும் ஒருவர்.

பொறியியல் துறையில் 3ம் ஆண்டு மாணவரான இவர் விரைவு கார் வடிவமைப்பின் முக்கிய அங்கம் வகித்தவர்.

"துல்லியமான பொறியியலின் உச்சம்தான் இது, விரைவு கார் தயாரிப்பதின் வடிவமைப்பு, பொறியியல், ஓட்டும் நுணுக்கம் ஆகிய அனைத்தையும் ஒரு சேர கற்றுக்கொள்ள இது பெரிதும் உதவியது," என்றார் விக்னேஷ்வரன்.

விக்னேஷ்வரனுக்கு வாழ்நாளில் மறக்க முடியாத, முக்கியமான ஒரு நிகழ்வு இது.

மேலும் இந்த அனுபவம் பொறியியல் துறையிலேயே அவருக்கு பல வாய்ப்புக்களுக்கு வித்திட்டிருக்கிறது.

தூக்கம் இழந்து, படிப்பையும் கவனித்துக் கொண்டு, குடும்பத்திலும் ஈடுபட்டது வீண் போகவில்லை என்பதில் விக்னேஷ்வரனுக்கு பெரும் மனநிறைவு.

மோட்டார் கார் தயாரிப்பில் அனுபவமும் பிரசித்தியும் பெறாத சிங்கப்பூருக்கு பெருமை தேடித் தந்துள்ளனர் விக்னேஷ்வரனும் பல்கலைக் கழக விரைவு கார் குழுவினரும்.




தேசிய பல்கலைக்கழக விரைவுக் காருடன் விக்னேஷ்வரன் படம்: தேசிய பல்கலைக் கழகம்